# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 | வள்ளுவர் ஆண்டு 2055 | புரட்டாதி 21 செவ்வாய்க்கிழமை | 07.10.2025 | கதிர் 332




யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel


## முன்னாள் ஜனாதிபதிகளுக்குப் பாதுகாப்பு தொடரும்



கொழும்பு, ஒக். 07

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு வாகனங்களை, அவர்கள் கோரினால் மீண்டும் ஒப்படைக்க முடியும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் நீக்குதல் சட்டம் அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய முன்னாள் ஜனாதிபதிகள் தாம் அனுபவித்த வரப்பிரசாதங்களை மீள அரசிடம் கையளித்து வருகின்றனர்.

எனினும், அந்த ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் நீக்குதல் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை. இந்தநிலையில், சிலர் தாங்கள் பயன்படுத்திய சில பாதுகாப்பு வாகனங்களைக் கூட மீள ஒப்படைத்துள்ளனர்.

7 ➤

# பொலிஸாருக்கு எதிராக வடக்கில் சட்டத்தரணிகள் இன்று போராட்டம்





யாழ்ப்பாணம், ஒக். 07

பொலிஸார் முன்னெடுத்து வரும் சட்ட முரணான செயற்பாடுகளை கண்டித்து வடக்கின் சட்டத்தரணிகள் இன்று ஒரு நாள் பணிப்புறக்கணிப்பைப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

யாழ். மாவட்டத்தின் அனைத்து நீதிமன்றங்கள் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா உள்ளிட்ட மாவட்டங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் சட்டத்தரணிகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகள் யாழ்ப்பணத்தில் உள்ள நீதிமன்ற வளாகம் முன்னிலையில் இன்று காலை கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

கடந்த 5 ஆம் திகதி முறையற்ற வகையில் காணி ஒன்றுக்கு உரிமம் ஏற்பாடு செய்து கொடுத்ததாகக் கூறி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடமையாற்றும் பெண் சட்டத்தரணி ஒருவரின் இல்லத்தில் அவரைக் கைது செய்யும் முகதாவில் வீட்டுக்குள் நுழைந்த யாழ்ப்பாணம் விசேட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார், அந்த வீட்டில் சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரம் எதுவுமின்றி தேடுதல் நடத்தும் தோரணையில் அச்சுறுத்தலாக நடந்து கொண்டனர்.

7 ➤

## கிழக்கிலும் சட்டத்தரணிகள் போராட்டம்

திருகோணமலை, ஒக். 07

"யாழ்ப்பாணத்தில் பெண் சட்டத்தரணியின் இல்லத்துக்குள் நீதிமன்ற உத்தரவு இன்றி பொலிஸார் உட்பிரவேசித்து தேடுதலில் ஈடுபட்டமை சட்டத்தரணிகளின் சிறுப்புரிமையை மீறும் செயல். எனவே இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்." - என்று கூறி இன்று திருகோணமலை நீதிமன்றத் தொகுதிக்கு முன்பாக மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தினர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் சட்டத்தரணி ஒருவர் காணி உறுதிப்பத்திரம் ஒன்று தொடர்பில் எழுந்த குற்றச்சாட்டை அடுத்து

7 ➤



## இளம் தம்பதி வெட்டிக்கொலை!



அம்பாந்தோட்டை, ஒக. 07

அம்பாந்தோட்டை, ஹங்கம, ரன்ன, வடிகல - பகுதியில் உள்ள ஒரு வீட்டில் இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கூரிய ஆயுதங்களால் இருவரும் வெட்டிப் படுகொலை

7 ➤

## மூதூரில் 17 வயது மாணவி உயிர்மாய்ப்பு!



மூதூர், ஒக். 07

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தின் பெரியபால பகுதியில் 17 வயது மாணவி ஒருவர் உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

இந்த மாணவி நேற்று திங்கட்கிழமை பிற்பகல் பெரியபாலம் பகுதியில் உள்ள அவரது வீட்டில் மருந்துகளை அதிக அளவில் அருந்திய நிலையில் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்.

7 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# பணி இடைநீக்கப்பட்டுள்ள நீதிபதிகளின் சம்பளம் தொடர்பான தீர்மானம்

கொழும்பு, ஒக் .07

பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள நீதிபதிகளுக்கு பாதி சம்பளம் வழங்கவும், அவர்களுக்கு வழங்க வேண்டிய பல கொடுப்பனவுகளை வழங்காமல் இருக்கவும் நீதிச் சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பிரசன்ன அல்விஸ், இது தொடர்பான சுற்றறிக்கையை அனைத்து மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு குற்றச்சாட்டுகளில் குற்றம் சாட்டப்பட்ட நீதிபதிகளை பணி இடை நீக்கம் செய்ய நீதிச் சேவை ஆணைக்குழு சமீபத்தில் நடவடிக்கை எடுத்திருந்தது.

அதன்படி, அந்த நீதிபதிகளுக்கு பாதி சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று நீதிச் சேவை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இடைநீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளுக்கு பாதி சம்பளம் வழங்குவதில் தொழில்முறை கொடுப்பனவுகள், தனிப்பட்ட கொடுப்பனவுகள், வாழ்க்கைச் செலவு கொடுப்பனவுகள் மற்றும் மொழி கொடுப்பனவுகள் மட்டுமே வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனினும் தொலைபேசி கொடுப்பனவுகள், வாகன கொடுப்பனவுகள், சாரதி கொடுப்பனவுகள், புத்தக கொடுப்பனவுகள், வீட்டு வாடகை கொடுப்பனவுகள், மேன்முறையீட்டு கொடுப்பனவுகள் மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகள் என்பனவற்றை சம்பந்தப்பட்ட நீதிபதிகளுக்கு வழங்காதிருக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அரச வைத்திய அதிகாரிகள் அவசர கூட்டத்திற்கு அழைப்பு

கொழும்பு, ஒக் .07

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அவசர செயற்குழு கூட்டம் இன்று நடைபெற உள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் வைத்தியர்களின் இடமாற்றம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை குறித்து கலந்துரையாடுவதற்காக இந்த அவசர கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதன் உதவிச் செயலாளர் வைத்தியர் ஹன்சமால் வீரசூரிய தெரிவித்தார்.

குறித்த மாவட்டத்தில் சுகாதார நிர்வாகத்தால் தன்னிச்சையாக வைத்தியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அம்பாறை மாவட்டத்தில் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

இதுவரை அரசாங்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் கவனம் செலுத்தாததால், அவர்களின் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பாக எடுக்க வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து இன்று முடிவு செய்யவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் ஹன்சமால் வீரசூரிய தெரிவித்தார். (ஐ)

# தாஜுதீன் கொலை விசாரணையால் கலக்கமடைந்த குடும்பம் உண்மைகள் வெளிப்படுத்தப்படும்! – பாதுகாப்பு பிரதி அமைச்சர் அதிரடி



கொழும்பு, ஒக் .07

றக்பி வீரர் வசீம் தாஜுதீன் கொலையுடன் தொடர்புடைய விசாரணைகள் தீவிரமடைந்துள்ளதால் சிலர் கலக்கமடைந்துள்ளனர். அந்த கலக்கத்துக்கும் தாஜுதீன் கொலைக்குமிடையிலான தொடர்புகள் என்ன என்பது வெகுவிரைவில் நாட்டுக்கு வெளிப்படுத்தப்படும் என பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வசீம் தாஜுதீன் கொலையுடன் தொடர்புடைய விசாரணைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாகவே சிலர் கலக்கமடைந்துள்ளனர்.

இந்த கலக்கத்துக்கும் தாஜுதீன் கொலைக்குமிடையிலான தொடர்புகள் என்ன என்பது விசாரணைகள் மூலம் வெளிப்படும். குறிப்பிட்டவொரு குடும்பமே இவ்வாறு அளவுக்கதிக கலக்கத்தில் உள்ளது.

அந்த குடும்பம் ராஜபக்ஷ குடும்பமா அல்லது வேறு குடும்பமா என்பதை எம்மால் கூற முடியாது. ஆனால் விசாரணைகளுக்கமைய உண்மைகள் வெளிப்படுத்தப்படும்.

கைது செய்யப்படுபவர்களின் வாக்குமூலங்கள் பெறப்படும். அவ்வாறான வாக்குமூலங்களிலிருந்து கிடைக்கக் கூடிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மேலதிக விசாரணைகள் எவ்வித தடைகளும் இன்றி முன்னெடுக்கப்படும். யாரும் பயப்பட வேண்டிய தேவையில்லை. என்றார். (ஐ)



# எலிக்காய்ச்சலால் 10 பேர் பலி அதிகரிக்கும் நோயாளர்கள்




கொழும்பு, ஒக் .07

அனுராதபுரம் மாவட்டத்தில் இந்த வருடம் எலிக்காய்ச்சலினால் 10 பேர் உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் வைத்தியர் என்.சி.டி.ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் எலிக்காய்ச்சலினால் 743 நோயாளர்கள் பதிவாகியதாகவும் அவர்களில் 16 பேர் உயிரிழந்துள்ளதாகவும் வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார்.

சீரற்ற காலநிலை காரணமாக எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையினால், அவர்களுக்கு நோயாளர் பராமரிப்பு சேவைகளை வழங்குவதில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நோயாளிகளுக்கு அதிக மருந்துகளை வழங்க வேண்டிய அவசியம், மனித வள பற்றாக்குறை, அதிக பணியாளர்களை நியமிக்க வேண்டிய தேவை, அவசர சிகிச்சை பிரிவுகளை அதிக அளவில் பயன்படுத்த வேண்டிய அவசியம் போன்ற பல பிரச்சனைகளை மருத்துவமனை ஊழியர்கள் சந்திக்க வேண்டியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

"லெப்டோஸ்பைரா" என்ற தொற்று உடலுக்குள் செல்வதால் இதய நோயாளிகளுக்கு வழங்கப்படுவது போன்ற வசதிகளை வழங்க வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

போதுமான வசதிகளை வழங்குவதற்கு பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் முடிந்தவரை அவதானத்துடன் செயற்படுமாறும் அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ)

# இலங்கையில் இளைஞர்களிடையே தீவிரமடையும் எச்.ஐ.வி தொற்று



கொழும்பு, ஒக் .07

இலங்கையில் 15-29 வயதுக்குட்பட்டவர்களிடையே எச்.ஐ.வி தொற்று அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிக எண்ணிக்கையிலான எயிட்ஸ் நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உலகில் பெரும் பேரழிவை ஏற்படுத்தும் பாலியல் வைரஸ்களில் எச்.ஐ.வியும் ஒன்றாகும்.

இது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை நேரடியாகத் தாக்கி உடலை பலவீனப்படுத்துகிறது.

மேலும் மிகவும் ஆபத்தான சூழ்நிலை என்னவென்றால், இருமல் அல்லது சளி போன்ற ஒரு சிறிய நோய் ஏற்பட்டால் கூட அது மரணத்திற்கு வழிவகுக்கும்.

எச்.ஐ.வி தொற்றுகள் ஏற்படக்கூடிய மூன்று முக்கிய வழிகளை சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

1. எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான ஒருவருடன் உடலுறவு கொள்வது

எச்.ஐ.வி நோயாளியை முத்தமிடுவதால் நோய் பரவாது. எனினும் பாலியல் ரீதியான உடலுறவினால் பரவுகின்றது. குறிப்பாக ஆசனவழி உடலுறவுதான் எச்.ஐ.வி வருவதற்கான முக்கிய காரணமாக கருதப்படுகின்றது. இதுபோன்ற பாதுகாப்பற்ற உடலுறவு மூலம் பரவக்கூடிய எச்.ஐ.வி வைரஸ், உடல் முழுவதும் சுமார் 72 மணிநேரத்திற்குள் பரவி விடும்.

2. ஊசிகளின் கட்டுபாடற்ற பயன்பாடு

ஊசி மூலம் போதைப்பொருள் பாவனை மூலமும் வெகுவாக பரவுவதுடன் ஒரே ஊசியை பலர் பயன்படுத்துவதற்கு இதற்கு காரணமாக அமைந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

3. எயிட்ஸ் நோயாளியாக இருக்கும் கர்ப்பிணித்தாய்மாரிடத்தில் இருந்து அவரது பிறக்கவுள்ள குழந்தைக்கும் எச்.ஐ.வி வைரஸ் பரவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில் 411 நோயாளர்களும், 2022 இல் 607 நோயாளர்களும், 2023 இல் 697 நோயாளர்களும், 2024 இல் 824 நோயாளர்களும் கண்டறியப்பட்டுள்ளனர்.

அதிகளவில் ஆண்களே எயிட்ஸ் நோயாளர்களாக கண்டறியப்பட்டுள்ளனர். இது 7:1 விகிதமாகும். அதன்படி, 2025 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் மார்ச் வரை அடையாளம் காணப்பட்ட புதிய எயிட்ஸ் நோயாளர்கள் உட்பட, நாட்டில் இதுவரை 6,740 நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தரவுகள் தெரிவிக்கின்றன.

2024 ஆம் ஆண்டில், 824 புதிய எச்.ஐ.வி தொற்றுகள் அடையாளம் காணப்பட்டன, அவற்றில் அதிகபட்ச எண்ணிக்கை கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலிருந்து பதிவாகியுள்ளது.

எயிட்ஸ் நோயினால் 47 பேர் உயிரிழந்துள்ளனர்.

இலங்கை குறைந்த எச்.ஐ.வி பாதிப்பு உள்ள நாடாகக் கருதப்பட்டாலும், கடந்த ஆண்டு பதிவான புதிய தொற்றுகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு கவலையளிப்பதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சுகாதார அமைச்சின் கீழ் செயல்படும் தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம், இலவச மற்றும் ரகசிய சோதனை மற்றும் சிகிச்சைகளை வழங்குகிறது.

இலங்கை முழுவதும் உள்ள 41 பாலியல் நோய் சிகிச்சை மையங்களில் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்களுக்கு இலவச சிகிச்சையை வழங்குகிறது.

எயிட்ஸ் தொடர்பான சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் தொலைபேசி (94 703 733 933) இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)



# வீடுகள், வர்த்தக நிலையங்களுக்குள் உட்புகுந்த வெள்ள நீர்

அம்பாறை, ஒக் .07

அம்பாறையில் மழையுடன் கூடிய காலநிலை மாற்றம் ஏற்பட்டமையினால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

நேற்று இரவு வேளையில் சில இடங்களில் மழை குறைந்து காற்றுடன் கூடிய காலநிலை காரணமாக மக்களது அன்றாட இயல்பு வாழ்க்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நாவிதன்வெளி, கல்முனை முஸ்லீம் பிரிவு, தமிழ் உப பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பிரதான போக்குவரத்து பாதைகள் சில வெள்ளக்காடாக காட்சி தருவதுடன் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, நற்பிட்டிமுனை பிரதேச பிரதான பாதைகளில் நீர் நிரம்பி ஓடுவதுடன் வாகன சாரதிகள் பாதசாரிகள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

மேலும் மழை காரணமாக வீடுகள், வர்த்தக நிலையங்களுக்குள் வெள்ள நீர் உட்புகுந்துள்ளதுடன் அவற்றை வெளியேற்றும் முயற்சியில் பாதிக்கப்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் வடிகான்களை விரைந்து சீர்செய்யுமாறு கல்முனை மாநகர சபையிடம் பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ)

# பதவி இறக்கத்துடன் இடமாற்றம் செய்யப்பட்ட யாழ். மாவட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள்!

யாழ். மாவட்டத்தின் ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவு ஆகிய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளாக கடமையாற்றி வந்த சிலருக்கு, பதவி இறக்கத்துடன் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவு ஆகிய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொறுப்பதிகாரிகள் தொடர்பில் பொலிஸ் தலைமையகத்துக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பிரதம இன்ஸ்பெக்டர் உட்பட 32 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இடமாற்றங்களின் விளைவாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவிகளை வகித்த 10 அதிகாரிகள் தங்கள் பொறுப்பதிகாரி பதவிகளை இழந்துள்ளனர்.

குறித்த 10 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் புதிய பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேபோல் 12 அதிகாரிகளுக்கு புதிய பொறுப்பதிகாரி பதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக்க தெரிவிக்கப்படுகின்றது.



# மின்னல் தாக்கி மீனவர் மரணம்

கொழும்பு, ஒக். 07

மீன்பிடிப் படகில் மின்னல் தாக்கியதில் மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும், மற்றொருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

மக்கோன, தியலகொட பகுதியைச் சேர்ந்த ஹெட்டியாராச்சி திஷாந்த 41 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தள்ளார்.

இன்று காலை ஒரு நாள் மீன்பிடிப் பயணமாக இருவரும் மீன்பிடிக்கச் சென்றுள்ளார்கள். இதன்போது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விஜய் மீது எங்களுக்கு எந்த வன்மமும் இல்லை, அவரை கைது செய்ய வேண்டும் என நாங்கள் வலியுறுத்தவில்லை : திருமாவளவன்




விஜயை கையில் எடுக்க பாஜக பகீரத முயற்சிகளை மேற்கொள்கிறது என்று விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார். சென்னையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அவர், "விஜய் மீது எங்களுக்கு எந்த வன்மமும் இல்லை, அவரை கைது செய்ய வேண்டும் எனவும் நாங்கள் வலியுறுத்தவில்லை.

நடந்த சம்பவத்திற்கு விஜய் தார்மீக பொறுப்பு ஏற்க வேண்டும் என்று தான் விமர்சனம் செய்து வருகிறோம். பாஜக, அதன் கூட்டணி கட்சிகள்தான் இதில் அரசியல் செய்கின்றன. விஜயை கையில் எடுக்க பாஜக பகீரத முயற்சிகளை மேற்கொள்கிறது.

சதிகார, சூழ்ச்சிகார அரசியல் சக்திகளிடம் சிக்கினால் அவர் இதுபோன்ற பல நெருக்கடிகளை சந்திக்க நேரும்விஜய் சுதந்திரமாக சிந்தித்து செயல்பட வேண்டுமென்பது தான் என் வேண்டுகோள். தமிழ்நாடு அரசின் செயல்பாடுகள் இந்த விவகாரத்தில் திருப்தி அளிக்கிறது. ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் விசாரணை ஆணையம் அமைத்திருப்பதை வரவேற்கிறோம். கரூர் துயரம் தொடர்பாக அஸ்ரா கார்க் தலைமையில் புலனாய்வு குழு அமைத்திருப்பதையும் வரவேற்கிறோம். உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி மீது தாக்குதல் நடத்தியதை வன்மையாக கண்டிக்கிறோம்." இவ்வாறு தெரிவித்தார். (ஐ)

## கரூர் நிகழ்வு சோகம் தான் அதையே தினமும் பேச வேண்டாம் என்பது என்னுடைய கருத்து :கமல்ஹாசன்



கரூர் நிகழ்வு சோகம்தான் அதையே தினமும் பேசவேண்டாம் என்பது என்னுடைய கருத்து என்று கமல்ஹாசன் தெரிவித்துள்ளார். பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் உடல் நலக்குறைவு காரணமாக சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இதைத் தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோர் நேற்று இரவு நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர்.

இதையடுத்து இன்று காலை மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவரும், எம்.பி.யுமான கமல்ஹாசன் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், "டாக்டர் ராமதாஸ் அய்யா அவர்களை சந்தித்து நலம் விசாரிக்க வந்தேன். விசாரிப்பதற்கு முன்பே நல்ல செய்தி வந்தது. இன்று மாலை அவரை டிஸ்சார்ஜ் செய்கிறார்கள். அவருடன் பேசிக்கொண்டு இருந்தேன். நலமாக இருக்கிறார். வைகோ அய்யா அவர்களும் ஓய்வு எடுத்துக்கொண்டு இருக்கிறார். அவருக்கும் ஜுரம் தணிந்துவிட்டதாக சொன்னார்கள். அவருடைய மகனிடம் நலம் விசாரித்தேன். கரூர் நிகழ்வு சோகம்தான் அதையே தினமும் பேசவேண்டாம் என்பது என்னுடைய கருத்து. கரூர் பலி போல இனி நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது உங்கள் கடமையும் என் கடமையும்தான்."இவ்வாறு தெரிவித்தார். (ஐ)

## சென்னையில் எடப்பாடி பழனிசாமியுடன் பாஜக தேர்தல் பொறுப்பாளர்கள் சந்திப்பு



சென்னையில் எடப்பாடி பழனிசாமியுடன் பாஜக தேர்தல் பொறுப்பாளர்கள் சந்தித்து வருகின்றனர். சென்னை கிரீன்வேஸ் சாலையில் உள்ள அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி வீட்டிற்கு தமிழக பாஜகவின் தேர்தல் பொறுப்பாளர், தமிழக பாஜகவின் மாநில தலைவர் உள்ளிட்ட நிர்வாகிகள் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டு வருகின்றனர். தமிழக பாஜக சார்பில் வரவிருக்கும் சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்வது தொடர்பாக பாஜகவின் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தலைமையில் பிரச்சார கூட்டம் தொடங்க உள்ளது.

வரும் 12ம் தேதி பிரச்சாரக் கூட்டத்தை ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்டோர் தொடங்கி வைக்க உள்ளனர். அத்தகைய பிரச்சார கூட்டத்தின் முன்னோட்டமாக கூட்டணி கட்சியின் தலைவர்களை ஒன்றிணைக்க வேண்டும் என தேசிய பாஜகவின் தலைமை முடிவு செய்திருந்தது. அந்த அடிப்படையில்அதிமுககூட்டணில் இருக்க கூடிய நிலையில், எடப்பாடி பழனிசாமியும் அந்த பிரச்சாரத்திற்கு தலைமை தாங்க வேண்டும்என அழைப்பு விடுப்பதற்காகவும், வரக்கூடிய சட்டமன்ற தேர்தலில் பாஜக எந்தெந்த இடங்களில் போட்டியிட வேண்டும்.

கூடுதல் தொகுதிகள் ஒத்துக்கிட வேண்டும். என்பது குறித்தான முதற்கட்ட ஆலோசனையும் இன்றைய தினம் தமிழக பாஜகவின் தேர்தல் பொறுப்பாளராக உள்ள பைஜெயந்த் பாண்டா என்ற முக்கிய நிர்வாகி இன்று எடப்பாடி பழனிசாமி இல்லத்திற்கு வருகை தந்துள்ளார். அவரோடு பாஜகவின் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் பாஜகவின் மாநில துணை தலைவர் உள்ளிட்ட 3 பேர் மட்டும் தற்போது எடப்பாடி பழனிசாமி இல்லத்தில் ஆலோசனை நடத்தி வருகின்றனர். (ஐ)



## பொன் மாணிக்கவேலுக்கு எதிரான வழக்கை ரத்து செய்த உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு

பொன் மாணிக்கவேலுக்கு எதிரான வழக்கை ரத்துசெய்த உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. சிலை கடத்தல் தடுப்புப் பிரிவில் ஐ.ஜி.யாக பொன் மாணிக்கவேல் பணியாற்றிய போது, டிஎஸ்பி காதர் பாட்ஷா உள்ளிட்டோர் சிலை கடத்தலுக்கு உடந்தையாக இருந்ததாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதற்கிடையே, பொன் மாணிக்கவேல் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை கூறி, உரிய நடவடிக்கை எடுக்குமாறு சென்னை உயர் நீதிமன்றத்தில் காதர்பாட்சா மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், பொன் மாணிக்கவேல் மீது வழக்குப் பதிவு செய்து விசாரிக்குமாறு சிபிஐ-க்கு உத்தரவிட்டது. அதன்பேரில், அவர் மீது சிபிஐ வழக்குப்பதிவு செய்து, மதுரை மாவட்ட கூடுதல் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது.

இதற்கிடையே, தன் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்யக் கோரியும், வழக்கின் குற்றப்பத்திரிகை நகலை தனக்கு வழங்க உத்தரவிடுமாறும் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் பொன் மாணிக்கவேல் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி மஞ்சுளா, பொன் மாணிக்கவேல் மீது பதிவான வழக்கு மற்றும் குற்றப்பத்திரிகையை ரத்து செய்து உத்தரவிட்டார். இதனிடையே பொன் மாணிக்கவேலுக்கு எதிரான வழக்கை ரத்துசெய்த உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் காதர்பாட்சா மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார். சிலை கடத்தல் தடுப்பு பிரிவு ஐஜியாக இருந்தபோது பழிவாங்கும் நோக்கில் பொன் மாணிக்கவேல் தன் மீது வழக்கு தொடர்ந்துள்ளதாக அவர் மனுவில் குற்றம் சாட்டி உள்ளார். இந்த நிலையில், தன்னுடைய தரப்பு வாதத்தை கேட்காமல் எந்த உத்தரவும் பிறப்பிக்கக் கூடாது என பொன் மாணிக்கவேல் கேவியட் மனு தாக்கல் செய்தார். (ஐ)

## சபரிமலையில் தங்கம் மாயமான விவகாரம் ஏடிஜிபி தலைமையில் விசாரணை: உயர்நீதிமன்றம் உத்தரவு

சபரிமலை ஐயப்பன் கோயிலில் தங்கம் மாயமான சம்பவம் தொடர்பாக திருவிதாங்கூர் தேவசம் போர்டு லஞ்ச ஒழிப்புத்துறை சார்பில் கேரள உயர்நீதிமன்றத்தில் நேற்று ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், 1998ல் துவாரபாலகர் சிலைகளில் ஒன்றரை கிலோ தங்கத் தகடுகள் பதிக்கப்பட்டன என்றும், இதுதொடர்பாக அப்பணிகளை மேற்கொண்ட யூபி குரூப் நிறுவனம் ஆதாரங்களை வழங்கியுள்ளது என்றும் குறிப்பபடப்பட்டுள்ளது.

1998ல் துவாரபாலகர் சிலைகளில் ஒன்றரை கிலோ தங்கத்தகடுகள் பதிக்கப்பட்டது நிரூபணமாகியுள்ள நிலையில் தற்போது அதில் அனைத்தும் செம்புத் தகடுகள் தான் உள்ளன என்று கூறப்படுவது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 2019ல் துவாரபாலகர் சிலைகள் பழுது பார்ப்பதற்காகவும், தங்கமுலாம் பூசுவதற்காகவும் சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டதாக கூறப்பட்டது.

அப்போது பணிகள் முடிந்து சபரிமலைக்கு திரும்ப கொண்டு வந்தபோது அந்த சிலைகளில் 400 கிராம் தங்கம் மட்டுமே இருந்ததாக தேவசம் போர்டு கணக்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்படி என்றால் மீதமுள்ள 1.100 கிலோ தங்கம் எங்கே போனது என்பதில் மர்மம் நீடிக்கிறது. இது ஒருபுறம் இருக்க இப்போது அந்த 400 கிராம் தங்கம் கூட சிலைகளில் இல்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளது அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சபரிமலையில் தங்கம் மாயமானது தொடர்பான விசாரணை நேற்று கேரள உயர்நீதிமன்றத்தில் நடைபெற்றது.

அப்போது இந்தப் புகார் தொடர்பாக கேரள குற்றப்பிரிவு ஏடிஜிபி வெங்கடேஷ் தலைமையில் ஒரு குழு அமைத்து விசாரணை நடத்த உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த விவகாரம் நேற்று கேரள சட்டசபையில் எதிரொலித்தது. நேற்று காலை கேள்வி நேரம் தொடங்கியதும் காங்கிரஸ் தலைமையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையின் மையப்பகுதிக்கு சென்று சபரிமலையில் தங்கம் மாயமான விவகாரத்தில் தேவசம் போர்டு அமைச்சர் வாசவன் மற்றும் தலைவர் பிரசாந்த் ஆகியோர் ராஜினாமா செய்ய வேண்டும் என்றும், இது தொடர்பாக சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றும் கோரி கடும் ரகளையில் ஈடுபட்டனர். (ஐ)





# வளைவுகளின் ராணி: ஜாஹா ஹாடீட்!

வழக்கமான கட்டட வடிவமைப்புக் கூறுகள் அதாவது சரியான கோணங்கள் அல்லது கட்டங்கள் போன்றவற்றிலிருந்து மாறுபட்டு கட்டட வடிவத்தில் தீவிர சுதந்திரம் எடுத்துக் கொண்டு, ஒரு கட்டடத்தில் சிக்கலான தன்மையின் வெளிப்பாட்டை ஊக்குவிப்பது ஒரு வகையான கட்டடக்கலை. அதற்கு கட்டடக்கலையில் **‘DECONSTRUCTIVISM’** என்று பெயர். இந்த வகை கட்டடக்கலையின் தாய் இவர்.


ஜாஹா ஹாடீட் ஈராக்கின் பாக்தாத்தில் பிறந்து மேற்படிப்புக்காக வெளிநாடு சென்றார். அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் கணிதத்தில் பட்டம் பெற்ற பிறகு, கட்டடக்கலைதான் அவருடைய விருப்பமென முடிவு செய்து லண்டனில் உள்ள புகழ்பெற்ற ஏ ஏ கட்டடக்கலை கல்விக்கூடம் சென்றார்.

கல்லூரியில் அவருடைய நண்பர்கள் அவரை ’89 டிகிரி கண்டுபிடிப்பாளர்’ என்று அழைப்பார்கள். அவர் உருவாக்கிய ஒரு கட்டடமும் 90 டிகிரியில் அதாவது நேரான கோணத்தில் இருந்ததில்லை என்கிற காரணத்தினால்!

அவரது முன்னாள் பேராசிரியர் கூல்ஹாஸ், “சாஹா தனது சுற்றுப்பாதையில் மட்டுமே சுற்றிக்கொண்டிருந்த ஒரு கிரகம்” என்று அவரை விவரித்திருக்கிறார். ஜாஹா ஹாடீடின் சகோதரர் அவரைப் பற்றிப் பேசும்போது கட்டிடக்கலைஞராக இல்லாவிட்டால், அவர் ‘முதல் ஈராக்கிய விண்வெளி வீராங்கனை’யாக இருந்திருப்பார் என்றார்.

44 நாடுகளில் 950 க்கும் மேற்பட்ட கட்டடங்கள் மற்றும் மதிப்புமிக்க விருதுகளின் நீண்ட பட்டியலுடன்,





“கட்டடக்கலை இனி ஒரு ஆணின் உலகம் மட்டும் அல்ல. ஒரு பெண்ணால் முப்பரிமாணமாகச் சிந்திக்க முடியாது என்கிற ஆணாதிக்க சமூகத்தின் எண்ணம் மிகவும் அபத்தமானது” என்று தனது அறிக்கையை உறுதியாக நிரூபித்து காட்டியவர் ஜாஹா ஹாடீட்.

தான் படித்த கல்லூரியிலேயே உதவி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டு, 1979 இல் தனது சொந்த அலுவலகத்தைத் தொடங்கி , பகலில் கற்பித்தல், இரவில் வேலை என்று தொடர்ச்சியான கடின உழைப்புடன் முன்னேறினார்.

1982 ஆம் ஆண்டு ஹொங்காங்கில் ஓய்வுநேர விடுதியை வடிவமைப்பதற்கான சர்வதேசப் போட்டியில் அவர் வென்றார். ஆனால், அந்தக் கட்டடம் சவாலானதாக இருந்த காரணத்தினால் அது கட்டப்படவில்லை

அதைத் தொடர்ந்து பலர் அவரை விமர்சிக்க ஆரம்பித்தனர். ‘காகிதக் கட்டடக் கலைஞர்’ என்று அவர் முத்திரை குத்தப்பட்டார்.

மனம் தளராத ஜாஹா ஹாடீட் பல முயற்சிகளுக்குப் பிறகு 1990 இல் ஒரு தீயணைப்பு நிலையத்தை வடிவமைப்பதற்கான போட்டியில் வென்று அந்தக் கட்டடம் கட்டவும்பட்டது. அன்று அவர் உலகமே வியக்கும் நம்ப முடியாத ஒரு சாதனையைப் படைத்திருந்தார்.

வளைந்த முகப்புகள், கூர்மையான கோணங்கள் மற்றும் உலகில் உள்ள வலிமையான பொருள்களாகிய கான்கிரீட், ஸ்டீல் போன்றவற்றைப் பயன்படுத்தி மென்மையாகவும் அதே நேரத்தில் உறுதியானதாகவும் வகைப்படுத்தப்படும் கட்டமைப்புகளை உருவாக்கி, பலரை அதிர்ச்சியில் உறைய வைத்தார் ஜாஹா ஹாடீட்.

தனது கையால் வரைந்த கட்டடங்களை உணர தொழில்நுட்பத்தை அதிகம் பயன்படுத்தினார். அவரது புதுமையான தொழில்நுட்பங்களின் பயன்பாடு அதனை உருவாக்க ஏதுவாக இருந்தது.

360 டிகிரி வரை கோணங்கள் இருக்கும்போது எதற்கு அந்த நேர்கோணலான 90 டிகிரியையே பிடித்துக்கொண்டு தொங்குகிறீர்கள். நானும் என் கட்டடங்களும் ஒரு போதும் நீங்கள் கட்டமைத்த பெட்டிக்குள் அடங்க மாட்டோம்” என்று அவர் மேடையில் பேசியபோது உலகமே மெய்சிலிர்த்துப் போனது.

2015 பிரிட்டிஷ் சுஜடீயு தங்கப் பதக்கத்தை வென்று தனது ஏற்புரையில். “இப்போது நாம், எல்லா இடங்களிலும் மிகவும் சிறந்த பெண் கட்டடக் கலைஞர்களைப் பார்க்கிறோம். இது எளிதானது என்று ஒருபோதும் நினைக்காதீர்கள். பல நேரத்தில் நாங்கள் சந்திக்கும் சவால்கள் மலையைவிட மிகப் பெரியதாக இருக்கும்” என்று கூறினார்.

2016 ஆம் ஆண்டில் 65 வயதானஜாஹா ஹாடீட் மியாமி மருத்துவமனையில் எதிர்பாராத விதமாக இறந்தார். உலகம் அன்று உண்மையான தொலைநோக்குப் பார்வையாளரை இழந்து தவித்தது.

‘எல்லாப் பெண்களையும் புத்திசாலிகளாகவும், திறமைசாலிகளாகவும், கடினமானவர்களாகவும் பார்ப்பதினால் நான் ஒரு பெண்ணியவாதி ஆகிறேன்’ என்று அவர் பெருமையாகக் கூறுவார்.

தி கார்டியன் நாளிதழ் அவரை ‘வளைவுகளின் ராணி’ என்று அழைத்துப் பெருமைப்படுத்தியது.



# நேபாளத்தில் கொட்டித் தீர்க்கும் கனமழை..வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 60ஐ கடந்த பலி எண்ணிக்கை




நேபாளத்தில் பெய்துவரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 60ஐ தாண்டி உள்ளது. நேபாளத்தின் கோஷி, மாதேஸ், பாக்மதி, கண்டகி மற்றும் லும்பினி உள்ளிட்ட ஏழு மாகாணங்களில் பருவமழை பெய்து வருகிறது.

கனமழை பெய்து வருவதால் நீர்நிலைகள் நிரம்பி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கோசி நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் நேபாளத்தின் தென்கிழக்கு மாவட்டங்கள் கடும் பாதிப்புகளை சந்தித்துள்ளன. மேலும், பல இடங்களில் நிலச்சரிவுகளில் சிக்கி உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது.

மீட்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வரும் நிலையில் வெள்ளத்தில் சிக்கியவர்கள் ராணுவ ஹெலிகாப்டர் மூலம் மீட்கும் பணியில் நேபாள ராணுவம் ஈடுபட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களை ராணுவத்தினர் மீட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்துள்ளனர்.

இருப்பினும் தொடர்ந்து மழை பெய்து வருவதால் மீட்பு பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தால் பலர் புதையுண்டதாக தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில், பலி எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. (ஐ)

## 3 விஞ்ஞானிகளுக்கு மருத்துவத்திற்கான நோபல் பரிசு




இந்த ஆண்டுக்கான மருத்துவத்துறை நோபல் பரிசு அமெரிக்காவை சேர்ந்த மேரி ப்ராங்கோ, பிரெட் ராம்ஸ்டெல் மற்றும் ஜப்பானை சேர்ந்த ஷிமோன் ஆகியோருக்கு பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு பயனளிக்கும் வகையில் இயற்பியல், வேதியியல், மருத்துவம், அமைதி, பொருளாதாரம் மற்றும் இலக்கியம் ஆகிய துறைகளில் சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கி கவுரவிக்கப்பட்டு வருகின்றது. 2025ம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் குறித்த அறிவிப்புகள் வெளியாக தொடங்கிவிட்டன. அமைதிக்கான நோபல் பரிசு நார்வேவின் ஓஸ்லோவிலும், மற்ற துறைகளுக்கான பரிசுகள் ஸ்வீடனின் ஸ்டாக்ஹோமிலும் அறிவிக்கப்படுவது வழக்கமாகும். 2025ம் ஆண்டுக்கான மருத்துவத்துறைக்கான நோபல் பரிசு நேற்று அறிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசை அமெரிக்காவை சேர்ந்த மேரி ப்ரங்கோ, பிரெட் ராம்ஸ்டெல் மற்றும் ஜப்பானை சேர்ந்த ஷிமோன் ஷஹுகுச்சி ஆகியோருக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. உடலின் சொந்த செல்களை நோய் எதிர்ப்பு சக்தி தாக்காமல் தடுக்கும் முறை குறித்த கண்டுபிடிப்பிற்காக இந்த நோபல் பரிசு வழங்கப்படடுள்ளது. (ஐ)

## விக்கிபீடியாவுக்கு போட்டியாக எலான் மஸ்கின் குரோக்பீடியா: 2 வாரத்தில் அறிமுகம்

விக்கிபீடியாவுக்கு போட்டியாக குரோக்பீடியா எனும் ஏஐ மூலம் இயங்கும் தகவல் களஞ்சியத்தை இன்னும் 2 வாரத்தில் அறிமுகம் செய்ய இருப்பதாக அமெரிக்க தொழிலதிபர் எலான் மஸ்க் அறிவித்துள்ளார். ஆன்லைன் உலகின் தகவல் களஞ்சியமான விக்கிபீடியா கடந்த 2001ல் தொடங்கப்பட்டது. இதனை விக்கிபீடியா அறக்கட்டளை என்ற தொண்டு நிறுவனம் நிர்வகித்து வருகிறது. இந்த தளத்தில் 6.5 கோடிக்கும் மேற்பட்ட கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இந்நிலையில், விக்கிபீடியா தளத்தில் உள்ள கட்டுரைகள் பக்கசார்பாக இருப்பதாகவும், அரை உண்மைகள் கொண்டவையாக இருப்பதாக அமெரிக்க தொழிலதிபர் எலான் மஸ்க் தொடர்ந்து குற்றம்சாட்டி வந்தார்.

இந்நிலையில் விக்கிபீடியாவுக்கு போட்டியாக குரோக்பீடியா எனும் புதிய தகவல் களஞ்சியத்தை அடுத்த 2 வாரத்தில் அறிமுகம் செய்வதாக மஸ்க் தற்போது அறிவித்துள்ளார். இந்த குரோக்பீடியா எக்ஸ் ஏஐ எனும் மஸ்கின் செயற்கை நுண்ணறிவு நிறுவனம் மூலம் இயக்கப்படும். விக்கிபீடியாவில் வரும் தகவல்களை எக்ஸ் ஏஐ ஆய்வு செய்து அதில் உள்ள தவறுகள், பாதி உண்மைகளை திருத்தி அவற்றை சரி செய்யும். இதன் மூலம் பல உண்மைத் தகவல்களை மக்கள் அறிய முடியும் என மஸ்க் ஆதரவாளர்கள் சமூக ஊடகங்களில் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (ஐ)

## அமைதி பேச்சுவார்த்தைக்கு மத்தியில் காசாவில் ஒரே நாளில் 63 பேர் பலி: இஸ்ரேல் தாக்குதலால் பரபரப்பு



இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் இரண்டாம் ஆண்டை நெருங்கும் நிலையில், காசாவில் இதுவரை 67,000க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். காசாவில் இருந்து இஸ்ரேலியப் படைகள் ஓரளவு பின்வாங்கினாலும், தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்தச் சூழலில், நிரந்தரப் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்காக அமெரிக்கா முன்னெடுத்த திட்டத்தின் அடிப்படையில், எகிப்து தலைநகர் கெய்ரோவில் நேற்று முன்தினம் முதல் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

முதற்கட்டமாக, ஹமாஸ் பிடியில் உள்ள 48 இஸ்ரேலியப் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு ஈடாக, இஸ்ரேல் சிறைகளில் உள்ள பாலஸ்தீனியக் கைதிகளை விடுவிப்பது குறித்து ஆலோசிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் சில அம்சங்களை ஏற்றுக்கொள்வதாக ஹமாஸ் அறிவித்திருந்தாலும், நிரந்தரப் போர் நிறுத்தத்திற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளது. ஆனால், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம், ‘ஹமாஸ் ஆயுதங்களைக் கைவிடும் வரை முழுமையான படை விலக்கல் சாத்தியமில்லை’ எனத் தெரிவித்துள்ளது.

பேச்சுவார்த்தை ஒருபுறம் நடந்தாலும், காசா மீது இஸ்ரேல் தனது தாக்குதல்களைத் தொடர்கிறது. நேற்று மட்டும் காசாவில் நடத்தப்பட்ட தாக்குதல்களில், பொதுமக்கள் மற்றும் நிவாரண உதவிக்காகக் காத்திருந்தவர்கள் உட்பட 63 பேர் உயிரிழந்ததாக காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ஐ)



பாகிஸ்தானில் ஜாபர் விரைவு ரயில் மீது நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் 4 பெட்டிகள் தடம்புரண்டன. தண்டவாளத்தில் வெடிகுண்டு வைத்து விரைவு ரயில் வரும்போது வெடிக்கச் செய்துள்ளனர். ஜாபர் விரைவு ரயில் குவெட்டா நகருக்கு சென்று கொண்டிருந்த போது சிந்து - பலூசிஸ்தான் எல்லையில் தாக்குதல் நடத்தப்பட்டது. (ஐ)

## இளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முதற்கட்ட விசாரணையில் பாதிக்கப்பட்டவர்கள் 28 வயதுடைய ஒருவரும் அவரது மனைவியும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி வீட்டின் உரிமையாளர் தற்போது சிறையில் உள்ளார் என்றும், மேலும் அந்தத் தம்பதியினர் தற்காலிகமாக அந்த வீட்டில் வசித்து வந்ததனர் என்றும் கூறப்படுகின்றது.

கொலைக்கான காரணம் இன்னும் அறியப்படாத நிலையில் இன்று பிரேத பரிசோதனை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## மூதூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உடனடியாக அவர் மூதூர் தள வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும், அங்கு வழங்கப்பட்ட சிகிச்சைக்குப் பிறகும் அவரின் உடல் நலம் மேம்படாததால், இன்று செவ்வாய்க்கிழமை காலை அவர் உயிரிழந்தார்.

இந்த மரணத்துடன் தொடர்புடைய விசாரணைகளை மேற்கொள்வதற்காக, மூதூர் நீதிமன்றத்தின் கட்டளையின் பேரில், திடீர் மரண விசாரணை அதிகாரி முகமது யூசுப் முஹம்மது லாபிர் இன்று மூதூர் வைத்தியசாலைக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார்.

இதன்போது மேலதிக பரிசோதனைகள் அவசியம் எனக் கருதப்பட்டதனால், சடலம் மூதூர் பொலிஸாரின் மேற்பார்வையில் திருகோணமலை மாவட்ட சட்ட வைத்திய அதிகாரியிடம் இன்று மதியம் அனுப பப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக குடும்பத்தாரிடமும் சகோதரர்களிடமும் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணைகளின் போது, இது காதல் தொடர்பான பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டிருக்கலாம் எனத் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாகவே, வளர்ப்புத் தாயார் பயன்படுத்தும் நீரிழிவு நோய் மற்றும் நடுக்கத்துக்காகப் பாவிக்கும் மருந்துகளை மாணவி அதிகமாக அருந்தியிருக்கலாம் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச்சம்பவம்தொடர்பான முழுமையான உண்மைத் தகவல்கள், சட்ட வைத்தியரின் அறிக்கை வந்த பின்னர் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சட்டத்தின் கீழ் சில வரப்பிரசாதங்கள் மீள கையளிக்கப்பட வேண்டும் என்ற போதிலும், முன்னாள் ஜனாதிபதிகளுக்குப் பாதுகாப்பை வழங்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

எனவே, பாதுகாப்பு வாகனம் உள்ளிட்ட பாதுகாப்பு வரப்பிரசாதங்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிகளால் கோரிக்கை முன்வைக்கப்படுமாயின், அது குறித்து அரசு பரிசீலனை செய்யத் தயாராகவுள்ளது.

ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் நீக்குதல் சட்டத்தின் கீழ் வராத பாதுகாப்பு சார் விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு அரசு தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கும்." - என்றார்.

## பொலிஸாருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சட்ட முரணான செயற்பாட்டைக் கண்டித்து இன்று நடைபெற்ற போராட்டத்தின் போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சிரேஷ்ட சட்டத்தரணி வி.திருக்குமரன்,

"இந்தப் போராட்டம் சட்டத்தரணி மீது நடவடிக்கை எடுப்பதை கண்டிப்பதானதல்ல. சட்டம் அனைவருக்கும் பொதுவானது. ஆனால், அந்தச் சட்டத்தை சரியான தேடுதல் ஆணை இல்லாது மேற்கொண்டு வரும் செயற்பாடுகள் ஏற்றுக்கொள்ள முடியாது. அத்துடன் இந்தச் செயற்பாடு பொலிஸாரின் அத்துமீறிய செயற்பாட்டையே காட்டுகின்றது.

எனவே, சட்டத்தரணிகளுக்கு எதிராக அல்லாது பொதுமக்களுக்க எதிராக, பொலிஸார் முன்னெடுக்கும் சட்ட முரணான செயற்பாடுகளைக் கண்டித்தே இன்று வடக்கின் சட்டத்தரணிகள் ஒரு நாள் பணிப்புறக்கணிப்பை இன்று முன்னெடுத்துள்ளனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக கிழக்கின் சட்டத்தரணிகளும் சில மணி நேரம் இன்று பணிப்புறக்கணிப்பைச் செய்து எமது போராட்டத்தை வலுப்படுத்தினர்.

எனவே, சட்டத்தை முன்னெடுக்க முனையும் பொலிஸார் அதைச் சட்ட ரீதியாக முறையான வகையில் மேற்கொண்டு நீதியை வழங்க அல்லது குற்றவாளி எனச் சந்தேகிக்கும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது அவசியம்." - என்றார்.

## கிழக்கிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். இந்தச் சட்டத்தரணியின் இல்லம் நீதிமன்றத் தேடுதல் உத்தரவின்றி பொலிஸாரால் தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது என்று கூறியும், இதனைக் கண்டிப்பதாகத் தெரிவித்தும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

# NDTV உலக உச்சி மாநாடு பிரதமர் ஹரிணி பங்கேற்பு!

NDTV உலக உச்சி மாநாடு 2025 இல் பங்கேற்கும் பொருட்டு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய புதுடில்லி செல்லவுள்ளார்.

NDTV உலக உச்சி மாநாடு எதிர்வரும் ஒக்டோபர் 17 மற்றும் 18 ஆகிய திகதிகளில் புதுடில்லியில் நடைபெற உள்ளது. இந்த நிகழ்வில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இணைந்து கலந்துகொள்ளவுள்ளார்.

NDTV உலக உச்சி மாநாட்டில் உலகில் தற்போது மிகவும் செல்வாக்கு மிக்க சில பிரபலங்களை ஒன்றிணைக்கும் என கூறப்படுகின்றது. அவர்களில் தற்போது பதவியில் இருக்கும் இரண்டு பிரதமர்களான இந்தியாவின் நரேந்திர மோடி மற்றும் இலங்கையின் ஹரிணி அமரசூரிய மற்றும் இரண்டு முன்னாள் பிரதமர்களான பிரித்தானியாவின் ரிஷி சுனக் மற்றும் அவுஸ்திரேலியாவின் டோனி அபோட் ஆகியோரும் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை சந்தித்த மஹிந்த அமரவீர!

*முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை, முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர நேரில் சந்தித்து நலன் விசாரித்துள்ளார்.*

*இந்த சந்திப்பு தங்காலையிலுள்ள கார்ல்டன் இல்லத்தில் இடம்பெற்றது.*

*இந்த சந்திப்பில் பின்னர் மஹிந்த அமரவீர ஊடகங்களுக்கு தெரிவிக்கையில், மகிந்த ராஜபக்ச ஒரு சகாப்தத்தை உருவாக்கிய தலைவர் என்று கூறியிருந்தார்.*

*ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்களை நீக்குதல் சட்டத்தின் விதிகளின்படி, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களை அரசாங்கத்திடம் கையளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கிருந்து வெளியேறி, ஹம்பாந்தோட்டையில் உள்ள கார்ல்டன் இல்லத்திற்கு சென்று தங்கியுள்ளார்.*

*அன்றிலிருந்து முன்னாள் ஜனாதிபதியை சந்திப்பதற்காக அவரை நேசிக்கும் பல அரசியல்வாதிகள் மற்றும் ஆதரவாளர்கள் பலர் கார்ல்டன் சென்று நலன் விசாரித்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது*

# சிறுவர் தினத்தையொட்டி பொருட்கள் அன்பளிப்பு






யாழ். ஏழாலை தெற்கு மயிலங்காடு கிராமத்தில் உள்ளஸ்ரீ முருகன் முன்பள்ளியில் தேசிய சிறுவர் மற்றும் ஆசிரியர் தினங்களையொட்டி கலை நிகழ்வுகள் திங்கட்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றன.

இந்நிகழ்வுகள் ஏழாலை தெற்கு மயிலங்காடு கிராமத்தில் உள்ள கலாச்சார அபிவிருத்தி ஒன்றிய மண்டபத்தில் நடைபெற்றது.

ஸ்ரீ முருகன் முன்பள்ளியின் வேண்டுகோளுக்கு இணங்க, ஜேர்மன் நாட்டின் லுவிக்ஸ்பர்க் பிரதேசத்தில் வசிக்கும் கந்தசாமி சந்திரன் வழங்கிய நிதியுதவியின் ஊடாக சமூக மேம்பாட்டு கழகத்தினர் தேவையான பொருட்களை வழங்கினர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தின் ஓய்வுநிலை அதிபர் சைவப்புலவர் செல்லையா பரமேஸ்வரன் , சிறப்பு விருந்தினர்களாக சமூக மேம்பாட்டுக் கழகத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் இ.தயாபரன், சமூக செயற்பாட்டாளர் ப.சிறீதரன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வலி. தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் க.அபராசுதன், மயிலங்காடு கலாச்சார ஒன்றியச் செயலாளர் நா.ரமேஷ், ஸ்ரீஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் பொருளாளர் கி.இராஜசேகர்,ஸ்ரீ முருகன் அறநெறிப் பள்ளி ஆசிரியர் கு.யாம்சனா ஆகியோருடனும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

# இலங்கை பொருளாதார மீட்சியில் முழுமை அடையவில்லை– உலக வங்கி வெளியிட்ட தகவல்!

இலங்கை இன்னும் பொருளாதார மீட்சியில் முழுமை அடையவில்லை என உலக வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கையின் சமீபத்திய பொருளாதார செயல்திறன் வலுவாக இருந்த போதிலும், நெருக்கடிக்கு முந்தைய நிலையை அடையவில்லை என்பதுடன் கணிசமாக வறுமையும் உயர்ந்துள்ளதாக உலக வங்கி விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை பொருளாதாரமானது 2025ஆம் ஆண்டில் தொழில்துறையின் வளர்ச்சியினால் 4.6 சதவீதமாக வளர்ச்சியடையும்என எதிர்பார்க்கப்பட்டாலும், உலகளாவிய நிச்சயமற்ற தன்மை காரணமாக 2026ஆம் ஆண்டு இலங்கை பொருளாதாரமானது 3.5 சதவீதமாக குறைவடையும் எனவும் உலக வங்கி கணித்துள்ளது.

அத்துடன் இலங்கையின் பொருளாதாரம் இன்னும் 2018 அளவை விடக் குறைவாகவே உள்ளது.

வறுமை குறைந்து வந்தாலும், 2019 ஐ விட இரு மடங்கு அதிகமாகவே உள்ளது.

தொழிலாளர் சந்தை மீள்வது மெதுவாக உள்ளது

மேலும் பல குடும்பங்கள் நெருக்கடியின் போது இழந்த வாழ்வாதாரங்களை இன்னும் மீட்டெடுக்கவில்லை.

சனத்தொகையில் 10 சதவீதம் பேர் வறுமைக் கோட்டிற்கு சற்று மேலே வாழ்கின்றனர்.

ஊட்டச்சத்து குறைபாடு ஒரு தீவிரமான பிரச்சினையாகவே உள்ளது எனவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

எனவே நீண்டகால வளர்ச்சியை ஆதரிப்பதற்கும், நிதிக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் வறுமையைக் குறைப்பதற்கும் தனியார் துறை தலைமையிலான வளர்ச்சியை செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பரந்த சீர்திருத்தத்தை உலக வங்கி வலியுறுத்தியுள்ளது.

முக்கிய முன்னுரிமைகளில் வர்த்தகம் மற்றும் முதலீட்டிற்கான தடைகளைத் தளர்த்துவது, வணிகச் சூழலை மேம்படுத்துவது மற்றும் நிலம் மற்றும் தொழிலாளர் சந்தைகளை நிர்வகிக்கும் வரி நிர்வாகம் மற்றும் ஒழுங்குமுறைகளை நவீனமயமாக்குவது என்பன அவற்றில் முக்கியமானதாகும் என உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

அந்தவகையில் இலங்கையின் பொருளாதார மீட்சியை வலுப்படுத்துவதற்கு தொடர்ச்சியான பாரிய பொருளாதார ஸ்திரத்தன்மை, அவசர கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் பொது செலவினம் தொடர்பான சிறந்த இலக்கு என்பன தேவைப்படும் என உலக வங்கி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.10.2025 வெளியிடப்பெற்றது.